# நிச்சயமாக, நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, உன்னை பெருகவே, பெருகப்பண்ணுவேன். எபிரேயர் 6 : 14

## WE WISH YOU A HAPPY CHRISTMAS !

சமீபத்திலே ஒரு நாள் நம்முடைய T.V.G.M. அலுவலகத்திற்கு ஒரு கடிதம் வந்தது. அதிலே கீழ்கண்டவாறு குறிப்பிட்டிருந்தது.

"உங்களது பத்திரிக்கையை படித்தோம். மிக்க ஆறுதல் அடைந்தோம். கர்த்தருடைய வாக்குத்தத்த வசனங்களை கேட்கும் பொழுது மிக்க மகிழ்ச்சி. ஆனால் எங்கள் குடும்பத்தில் இன்னும் ஒரே குழப்பமாக இருக்கிறது. எனது கணவர் குழந்தையில்லையே என்று புலம்பிக்கொண்டு, மனதில் நிம்மதியில்லாமல் அடிக்கடி என்னிடம் சண்டைப்பண்ணிக் கொண்டு குடும்பத்தில் சந்தோஷம் இல்லாமல் இருக்கிறது.

ஐயா, கட்டாயம் எனது குடும்பத்தில் ஒரு மழலைச் செல்வத்தை தந்து தேவன் ஆசீர்வதித்தால், 100–கிராம ஊழியத்திற்கு மாதந்தோறும் வருமானத்தை அனுப்பலாம் என்று நினைக்கிறேன். இந்த வருடத்தில் தேவன் நிச்சயம் எனக்கு ஒரு குழந்தையை தருவாரா ? பதில் எழுதுங்கள்.

அப்படி தேவன் தந்தால் உங்களுக்கு மாதம் எப்படியாவது வருமானத்தில் கொஞ்சம் அனுப்பிவைக்கிறோம். ஜெபித்து தேவன் அருளும் வார்த்தையை எங்களுக்கு எழுதுங்கள். அதிலேயும் நீங்கள் எழுதுகிற வார்த்தைகள் என் கணவருடைய மனம் சந்தோஷமடையும் படியாக சமாதானம் அருளும் வார்த்தைகளை எழுதுங்கள் என்பதாக.

என் அன்பு சகோதரனே, சகோதரியே மேற்கண்ட கடிதத்தைப் படித்து, அதிலுள்ள வாசகங்களை நினைத்து, நினைத்து மனம் உடைந்து போனேன்.

**"நான் தேவனா ?"**

என்று என் மனம் அங்கலாய்த்து கொண்டே இருந்தது. ஆண்டவரே நான் என்ன பதில் எழுதுவேன் என தீவிரமாக சிந்திக்கலானேன். எந்தவித பதிலும் கிடைக்கவில்லை.

இப்படியிருக்கும்பொழுது, மறுநாள் காலை TVGM அலுவலக ஜெபம் நடைபெற்றது. அப்பொழுது அலுவலகத்தில் பணிபுரியும் சகோதரி அன்னாள் கர்த்தருடைய வார்த்தையை பகிர்ந்து கொண்டாள். அவள் சொன்ன வசனம் என் மனதை தொட்டது. நேற்று கடிதம் எழுதிய சகோதரிக்கு இதுவே பதில்.

அது மாத்திரமல்ல, டிசம்பர் மாதம் வாக்குத்தத்தமும் இதுவே என தேவன் திட்டமாகப் பேசினார். அதைத் தான் கீழே எழுதுகிறேன்.

**நிச்சயமாக, நான் உன்னை ஆசீர்வதிக்கவே,**
**ஆசீர்வதித்து, உன்னைப் பெருகவே பெருகப்பண்ணுவேன்.** – என்பதாக.

இந்த மாத வாக்குத்தத்தம் என்ன என வாஞ்சையோடு வாசிக்கும் என் அன்பு சகோதரனே சகோதரியே,

தேவன் உங்களுக்கு கடந்த மாதங்களில் கொடுத்த வாக்குத்தத்தத்தை சந்தேகிக்கவே வேண்டாம், ஏனெனில், தூதன் சகரியாவை நோக்கி, "**சகரியாவே பயப்படாதே**, உன் வேண்டுதல் கேட்கப்பட்டது உன் மனைவியாகிய எலிசபெத்து உனக்கு ஒரு குமாரனைப் பெறுவாள். அவனுக்கு யோவான் என்று பேரிடுவாயாக. உனக்கு சந்தோஷமும் மகிழ்ச்சியும் உண்டாகும். அவன் பிறப்பினிமித்தம் அநேகர் சந்தோஷப்படுவார்கள். அவன் கர்த்தருக்கு முன்பாக பெரியவனாயிருப்பான். திராட்சரசமும் மதுவும் குடியான். தன் தாயின் வயிற்றிலிருக்கும்போதே பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டிருப்பான்" – என்பதாக. ஆனால் சகரியா விசுவாசிக்கவில்லை.

அப்பொழுது தூதன் "**இதோ, தகுந்த காலத்திலே நிறைவேறப்போகிற என் வார்த்தைகளை நீ விசுவாசியாதபடியினால் இவைகள் சம்பவிக்கும் நாள்மட்டும் நீ பேசக்கூடாமல் ஊமையாயிருப்பாய்.**"– என்றான். அப்படியே ஆனது.

என் அன்பு சகோதரியே, நீங்களும் சந்தேகிக்கவேண்டாம். விசுவாசியுங்கள். வேதம் சொல்கிறது, "**நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய்.**"– என்பதாக.

**சங்கீதக்காரன் சொல்கிறான்,**

**எனக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராக என் கண்களை ஏறெடுக்கிறேன். வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து எனக்கு ஒத்தாசை வரும். – என்பதாக.**

என் அன்பு சகோதரனே, சகோதரியே, கர்த்தரையே நோக்கிப் பாருங்கள். அவர்கள் அவரை நோக்கிப் பார்த்து பிரகாசமடைந்தார்கள். அவர்கள் முகங்கள் வெட்கப்படவில்லை.

வேதம் சொல்கிறது,

**நிச்சயமாக, நான் உன்னை ஆசீர்வதிக்கவே, ஆசீர்வதித்து, உன்னைப் பெருகவே பெருகப்பண்ணுவேன்.**

***ஆசீர்வதியும் கர்த்தரே, ஆனந்தம் மிகவே ... ஆமென்.***